# இணையத்தில் தமிழ்ப் புத்தகங்கள் படிக்கலாம்!

ப. பாலசுப்பிரமணியம்

தமிழ் மின் மரபுடைமைக் குழு தேசிய நூலக வாரியத்துடன் இணைந்து சுமார் 350 உள்ளூர் படைப்புகளை மின்மயமாக்கியுள்ளது.

இந்த முயற்சியைக் கொண்டாட 22 ஆகஸ்ட், சனிக்கிழமையன்று தேசிய நூலக வாரியத்தில் நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டது.

நூலகத்திற்குச் செல்ல முடியாவிட்டாலும் இனி வீட்டிலிருந்தே தமிழ்ப் புத்தகங்களைப் படிக்க முடியும். கொடுக்கப்பட்டிருக்கும் இணையப்பக்கத்தில் உங்களுக்குப் பிடித்த தமிழ்ப் புத்தகங்களைப் படிக்கலாம். அதனைப் பதிவிறக்கமும் செய்யலாம்.

அந்த நிகழ்ச்சியில் பல தமிழ் ஆசிரியர்களும் மாணவர்களும் எழுத்தாளர்களும் கலந்துகொண்டனர்.

அவர்களில் இளம் எழுத்தாளரான ஹர்ஷினி மேரியும் ஒருவர். இவர் கென்டொன்மன்ட் தொடக்கப்பள்ளியில் தொடக்கநிலை இறுதி வகுப்பில் பயில்கிறார். ஆறாம் வகுப்பில் பயிலும் ஹர்ஷினி எழுதிய கதையின் தலைப்பு 'செய்தது யார்?'

ஹர்ஷினி மேரி தான் எழுதிய கதையை அவரே மேடையில் அனைவரின் முன்னிலையில் வாசித்துக் காண்பித்தார்.

அந்த மர்மக் கதையை எழுத அவருக்கு ஆறு மாதம் பிடித்ததாம். அந்தக் கதையை எழுத தமிழ் ஆசிரியர் திருமதி கணேஷும் அவரது குடும்ப உறுப்பினர்களும் மிகவும் உதவி செய்ததாகக் கூறினார் ஹர்ஷினி.

ஹர்ஷினியின் மர்மக் கதை பள்ளியில் இருக்கும் உணவு அங்காடிக் கடையிலிருந்து தொடங்குகிறது.

அந்தக் கதையைப் படிக்க விரும்புவோர், http://eresources.nlb.gov.sg/printheritage/ எனும் இணையப் பக்கத்திற்குச் சென்று பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

அந்த நிகழ்ச்சியைச் சிறப்பிக்கும் வகையில் பாரம்பரிய நடனமான கும்மி நடனமும் இடம்பெற்றது. கும்மியாட்டம் தமிழ் நாட்டின் பிரபல கிராமிய நடனங்களில் ஒன்றாகும். இதில் மொத்தம் 10 தொடக்கப்பள்ளி மாணவர்கள் கலந்துகொண்டு நடனம் ஆடினர்.

உள்ளூர் கவிஞர் திரு முத்து மாணிக்கத்தின் கவிதை வரிகளில் இந்நடனம் அமைக்கப்பட்டிருந்தது. இவர்களின் நடன ஆசிரியரான திருவாட்டி சாந்தா பாஸ்கர் கடந்த மூன்று மாதங்களாக மாணவர்களுக்கு நடனப் பயிற்சி அளித்தார். வண்ண ஆடையும் அணிகலன்களும் அணிந்து துடிப்பும் துள்ளலும் கலந்த படைப்பை இம்மாணவர்கள் வழங்கினர்.

'பாஸ்கர்'ஸ் ஆர்ட்ஸ் அகாடமி'யைச் சேர்ந்த இம்மாணவர்களின் விறுவிறுப்பான நடனம் பார்வையாளர்களின் பாராட்டைப் பெற்றது.



ஹர்ஷினி மேரி





படங்கள்: த. கவி